இந்திய அரசு

சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

# ஆந்திரப் பிரதேசச் சட்டமன்ற மேலவைச் சட்டம், 2005

(எண் 1/2006)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# THE ANDHRA PRADESH LEGISLATIVE COUNCIL ACT, 2005

**(No. 1 of 2006)**

**(As on 31st October, 2023)**

தமிழாக்கம்:

இந்திய அரசுக்காக

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

2023

# ஆந்திரப் பிரதேசச் சட்டமன்ற மேலவைச் சட்டம், 2005
(எண் 1/2006)

# THE ANDHRA PRADESH LEGISLATIVE COUNCIL ACT, 2005
(No. 1 of 2006)

# PREFACE

This edition of the Andhra Pradesh Legislative Council Act, 2005 (No. 1 of 2006) as on 31st October, 2023, containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the Gazette of the India, Extraordinary, Part XV, Section 1, Vol. I, dated 17th July, 2023 on Pages from 1 to 3.

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it become the authoritative texts of the Act in Tamil.

New Delhi, *(Signed)……*
17th July, 2023. *Secretary to Governmen of India.*

# முன்னுரை

2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறுள்ள ஆந்திரப் பிரதேசச் சட்டமன்ற மேலவைச் சட்டம், 2005 (எண்1/2006) இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது, இது 2023, ஜூலை 17 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி XV, பிரிவு 1, தொகுதி I இன் 1 முதல் 3 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ் மொழிபெயர்ப்பு, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் (50/1973) பிரிவு 2 இன் கூறு (அ) வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது, அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புது தில்லி, (ஒப்பம்)……
17,ஜூலை 2023. இந்திய அரசு செயலாளர்.

# THE ANDHRA PRADESH LEGISLATIVE COUNCIL ACT, 2005

**(No. 1 of 2006)**

**CONTENTS**


| Sections | | Pages |
|---|---|---|
| 1. | Short title. | 1 |
| 2. | Definitions. | 1 |
| 3. | Creation of Legislative Council for Andhra Pradesh. | 1 |
| 4. | Amendment of Third Schedule and Fourth Schedule of Act 43 of 1950. | 2 |
| 5. | Amendment of section 15A of Act 43 of 1951. | 3 |

# ஆந்திரப் பிரதேசச் சட்டமன்ற மேலவைச் சட்டம், 2005

(எண் 1/2006)

பொருளடக்கம்


| பிரிவுகள் | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | குறுந்தலைப்பு. | 1 |
| 2. | பொருள் வரையறைகள். | 1 |
| 3. | ஆந்திரப் பிரதேசத்திற்குச் சட்டமன்ற மேலவையை உருவாக்குதல். | 1 |
| 4. | 43/1950 ஆம் சட்டத்திற்கான மூன்றாம் இணைப்புப் பட்டியலுக்கும் நான்காம் இணைப்புப்பட்டியலுக்குமான திருத்தம். | 2 |
| 5. | 43/1951 ஆம் சட்டத்தின் 15(அ) பிரிவுக்கான திருத்தம். | 3 |

# THE ANDHRA PRADESH LEGISLATIVE COUNCIL ACT, 2005

**( No.1of 2006)**

[11th *January,* 2006.]

An Act to provide for the creation of Legislative Council for the State of Andhra Pradesh and for matters supplemental, incidental and consequential thereto.

BE it enacted by Parliament in the Fifty-sixth Year of the Republic of India as follows:—

Short title.

1. This Act may be called the Andhra Pradesh Legislative Council Act, 2005.

Definitions.

2. In this Act, unless the context otherwise requires, each of the words and expressions used herein and not defined but defined in the Representation of the People Act, 1950, shall have the same meaning as in that Act. 43 of 1950.

Creation of Legislative Council for Andhra Pradesh.

3. (1) As from such date[1] as the President may by order appoint, there shall be a Legislative Council for the State of Andhra Pradesh; and as from that date, in sub-clause (*a*) of clause (1) of article 168, after the words "States of", the words "Andhra Pradesh,", shall be inserted.

(2) In the said Council, there shall be 90 seats of which—

(a) the numbers to be filled by persons elected by the electorates referred to in sub-clauses (a), (b) and (c) of clause (3) of article 171 shall be 31, 8 and 8 respectively;

(b) the number to be filled by persons elected by the members of the Legislative Assembly of Andhra Pradesh in accordance with the provisions of sub-clause (d) of the said clause shall be 31; and

---

1. 30th March, 2007, (Legislative Council for Andhra Pradesh come to existence), *vide* notification No. G.S.R. 262(E), dated 30th March, 2007, *see* Gazette of India, Extraordinary, Part II, sec. 3(*ii*).

# ஆந்திரப் பிரதேசச் சட்டமன்ற மேலவைச் சட்டம், 2005

## (எண் 1/2006)

[2006, ஜனவரி 11]

ஆந்திரப் பிரதேச மாநிலத்திற்குச் சட்டமன்ற மேலவையை உருவாக்குவதற்கு வகைசெய்வதற்கும் மற்றும் அதற்குத் துணைவுறுவான, சார்வுறுவான மற்றும் விளைவுறுவான பொருட்பாடுகளுக்காகவுமானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் ஐம்பத்தாறாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப் படுவதாகுக:—

குறுந்தலைப்பு.

**1.** இந்தச் சட்டம், ஆந்திரப் பிரதேசச் சட்டமன்ற மேலவைச் சட்டம், 2005 என்று வழங்கப்பெறும்.

பொருள் வரையறைகள்.

**2.** இந்தச் சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி, இதில் பயன்படுத்தப்பட்டுப் பொருள்வரையறை செய்யப்படாத ஆனால், மக்கள் சார்பாற்றச் சட்டம், 1950 இல் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ள
43/1950. சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் ஒவ்வொன்றும் அந்தச் சட்டத்தில் உள்ளவாறு அதே பொருளைக் கொண்டிருக்கும்.

ஆந்திரப் பிரதேசத்திற்குச் சட்டமன்ற மேலவையை உருவாக்குதல்.

**3.** (1) குடியரசுத்தலைவர் ஆணையின் வழிக் குறித்திடும் அத்தகைய தேதியிலிருந்து[1] ஆந்திரப் பிரதேச மாநிலத்திற்காகச் சட்டமன்ற மேலவை ஒன்று இருத்தல் வேண்டும்; மற்றும், அந்தத் தேதியிலிருந்து 168 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின் (அ) உட்கூறில், ''மாநிலங்களில்'' என்ற சொல்லுக்கு முன்பு ''ஆந்திரப் பிரதேசம்'' என்ற சொல் புகுத்தப்படுதல் வேண்டும்.

(2) மேற்சொன்ன சட்டமன்ற மேலவையில், 90 பதவியிடங்கள் இருந்து வருதல் வேண்டும், அவற்றில்—

(அ) 171 ஆம் உறுப்பின் (3) ஆம் கூறின் (அ), (ஆ), (இ) ஆகிய உட்கூறுகளில் சுட்டப்பட்ட வாக்காளர் தொகுதிகளினால் தேர்ந்தெடுக்கப்பெற்ற நபர்களால் நிரப்பப்பட வேண்டிய எண்ணிக்கை, முறையே 31, 8 மற்றும் 8 ஆக இருத்தல் வேண்டும்.

(ஆ) மேற்சொன்ன கூறின் (ஈ) உட்கூறின் வகையங்களின்படி ஆந்திரப் பிரதேசச் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற நபர்களால் நிரப்பப்பட வேண்டிய எண்ணிக்கை 31 ஆக இருத்தல் வேண்டும்; மற்றும்

---

1. 2007, மார்ச் 30, (ஆந்திரப் பிரதேச மாநிலத்திற்குச் சட்டமன்ற மேலவையை உருவாக்குதல்) 2007, மார்ச் 30ஆம் தேதியிட்ட அறிவிக்கை எண் ஜி எஸ் ஆர் 262 (E) ஐ காண்க, இந்திய அரசிதழ், சிறப்பிதழ், பகுதி II, பிரிவு 3 (ii) ஐ பார்க்க.

(c) the number to be filled by persons nominated by the Governor of Andhra Pradesh in accordance with the provisions of sub-clause (e) of that clause shall be 12.

(3) As soon as may be after the commencement of this Act, the President, after consultation with the Election Commission, shall, by order, determine—

(a) the constituencies into which the State of Andhra Pradesh shall be divided for the purpose of elections to the said Council under each of the sub-clauses (a), (b) and (c) of clause (3) of article 171;

(b) the extent of each constituency; and

(c) the number of seats to be allotted to each constituency.

(4) As soon as may be after such determination, steps shall be taken to constitute the said Council in accordance with the provisions of this Act, the Representation of the People Act, 1950 and the Representation of the People Act, 1951. 43/1950. 43/1951.

Amendment of Third Schedule and Fourth Schedule of Act 43 of 1950.

4. In the Representation of the People Act, 1950,—

(a) in the Third Schedule, before entry No. 2 relating to Bihar, the following entry shall be inserted, namely:—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| "1. | Andhra Pradesh | 90 | 31 | 8 | 8 | 31 | 12"; |

(*b*) in the Fourth Schedule, before the heading "BIHAR", the following heading and entries shall be inserted, namely:—

"ANDHRA PRADESH

1. Municipal Corporations.
2. Municipalities.
3. Nagar Panchayats.

(இ) அந்தக் கூறின் (உ) உட்கூறின் வகையங்களின்படி ஆந்திரப் பிரதேச ஆளுநரால் நியமனம் செய்யப்பெற்ற நபர்களால் நிரப்பப்பட வேண்டிய எண்ணிக்கை 12 ஆக இருத்தல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு கூடிய விரைவில், குடியரசுத்தலைவர், தேர்தல் ஆணையத்துடன் கலந்தாய்வு செய்த பின்பு, ஆணையின் வழி,–

(அ) 171 ஆம் உறுப்பின் (3) ஆம் கூறின் (அ), (ஆ), (இ) ஆகிய உட்கூறுகளில் ஒவ்வொன்றின் படியும் மேற்சொன்ன மேலவைக்கான தேர்தல்களின் நோக்கத்திற்காக ஆந்திரப் பிரதேச மாநிலத்திற்குள்ளாகப் பிரிக்கப்பட வேண்டிய தேர்தல் தொகுதிகளையும்;

(ஆ) தேர்தல் தொகுதி ஒவ்வொன்றின் பரப்பெல்லையையும்; மற்றும்

(இ) தேர்தல் தொகுதி ஒவ்வொன்றிற்கும் ஒதுக்கப்படவேண்டிய இடங்களின் எண்ணிக்கையையும்

தீர்மானிப்பார்.

(4) அவ்வாறாகத் தீர்மானித்ததன் பின்பு கூடிய விரைவில்,
43/1950. இந்தச் சட்டத்தின் மற்றும் மக்கள் சார்பாற்றச் சட்டம், 1950 மற்றும்
43/1951. மக்கள் சார்பாற்றச் சட்டம், 1951 ஆகியவற்றின் வகையங்களின்படி மேற்சொன்ன மேலவையை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

4. மக்கள் சார்பாற்றச் சட்டம், 1950 இல்,– 43/1950 ஆம் சட்டத்திற்கான மூன்றாம் இணைப்புப் பட்டியலுக்கும் நான்காம் இணைப்புப் பட்டியலுக்குமான திருத்தம்.

(அ) மூன்றாம் இணைப்புப்பட்டியலில், பீகார் தொடர்பான பதிவு எண். 2 க்கு முன்பு, பின்வரும் பதிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

“1. ஆந்திரப் பிரதேசம் 90 31 8 8 31 12” ;

(ஆ) நான்காம் இணைப்புப்பட்டியலில், “பீகார்” என்ற தலைப்பிற்கு முன்பு, பின்வரும் தலைப்பும் பதிவுகளும் புகுத்தப்படுதல் வேண்டும், அவையாவன:-

**“ஆந்திரப்பிரதேசம்**

1. மாநகராட்சிகள்.
2. நகராட்சிகள்.
3. நகர் ஊராட்சிகள்.

4. Cantonment Boards.

5. ZilaPraja Parishads.

6. Mandal Praja Parishads.".

Amendment of section 15A of Act 43 of 1951.

5. In section 15A of the Representation of the People Act, 1951, for the words and figures "under the Legislative Councils Act, 1957" the words and figures "under the Andhra Pradesh Legislative Council Act, 2005" shall be substituted. 37/1957.

4. பாளைய வாரியங்கள்.

5. ஜில்லா பிரஜா பரிஷத்கள்.

6. மண்டல் பிரஜா பரிஷத்கள்''.

37/1957. 5. மக்கள் சார்பாற்றச் சட்டம், 1951 இன் 15 (அ) பிரிவில், ''சட்டமன்ற மேலவைகள் சட்டம், 1957 இன்படி'' என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் மாற்றாக ''ஆந்திரப் பிரதேசச் சட்டமன்ற மேலவைச் சட்டம், 2005 இன்படி என்ற சொற்களும் எண்களும் அமைக்கப்படுதல் வேண்டும். 43/1951 ஆம் சட்டத்தின் 15 (அ) பிரிவுக்கான திருத்தம்.